உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪௰.] சுபானு-௵ வைகாசி ௴ [பகுதி-௭.

Vol. 40. May-June 1943. No. 7.

திரு. வி. கனகசபைப்பிள்ளை*

திருவாளர் ராவ்ஸாஹிப் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.

சென்றநூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக்கல்வி தமிழ் நாட்டிற் பரவத்தொடங்கிற்று. இதன் பயனாக, ஆங்கிலங்கற்ற தமிழறிஞர்கள் பலவேறு வழிகளில் தமிழ்ப்பணிசெய்ய முற்பட்டனர். வசனநூல்கள், நாடகங்கள், விஞ்ஞானசாஸ்திர நூல்கள் முதலியவற்றை அவ்வத்துறையில் தகுதியுடையவர்கள் எழுதி வந்தார்கள். சிலர் பழைய இலக்கண இலக்கியங்களை அச்சிற் பதிப்பித்துப் பண்டைத்தமிழறிவைப் பரப்பினர். சிலர் தமிழ்நாட்டுப் பூர்வசரித்திரத்தைச் சிலாசாசனம், பண்டையிலக்கியங்கள் முதலியவற்றின் துணைகொண்டு புலப்படுத்தினர். சிலர் தமிழரின் பண்டைக்கால நாகரிகச்சிறப்பைத் தமிழ்நூல்களின் ஆதரவு கொண்டு தெளிவித்தலை மேற்கொண்டனர். கடைசியிற்கூறிய முயற்சியில் ஈடுபட்டவர்களிற் சிறந்தவர் திரு. வி. கனகசபைப் பிள்ளை.

* சென்னை அகில இந்தியரேடியோவில் 28-5-43-ல் ஒலிபரப்பியது. அநுமதிபெற்று வெளியிடப்படுகிறது.

கனகசபை தமிழ்க்கல்வியில் மேம்பட்டு விளங்கிய ஒரு வித்வ குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது தந்தை, விசுவநாதபிள்ளை யாழ்ப்பாணத்து மல்லாகம் என்ற ஊரிலிருந்து வந்தவர். அங்கேயுள்ள அமெரிக்கமிஷன் அதிகாரிகளான டாக்டர் வின்ஸ்லோ, பெர்ஸிவல் முதலியவர்களால், சி. வை. தாமோதரம்பிள்ளை முதலானவர்களோடுகூடத் தமிழ்நாட்டுக்குக் கல்வியின்பொருட்டு அனுப்பப்பெற்றவர். சென்னைச் சருவகலாசாலையில் பீ. ஏ. பட்டம் பெற்றபின், அரசாங்கத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளராயிருந்தவர்; பல ஆங்கிலநூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர்; தமிழ்-ஆங்கில அகராதியொன்று இயற்றிச் சென்னைக் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின்மூலம் வெளியிட்டவர். யாழ்ப்பாணம் தமிழ்க்கல்விக்குச் சிறந்தநாடு என்ற கீர்த்தியை வளர்த்தவர்களுள் இவர் ஒருவர். இவரது ஏகபுத்திரரான கனகசபைக்குத் தமிழார்வம் பிறவியிலேயே அமைந்தது என்று கூறுதல் மிகையல்ல.

கனகசபை பிறந்தது 25-5-1855-ல்; சென்னை கோமளேசுவரன்பேட்டை சந்திரபானுதெருவிலுள்ள ஒருவீட்டில். இவரது இளமைப்பருவத்தைக் குறித்து விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் கல்வியில் மிகவும் கருத்தூன்றியிருந்தாரென்று ஊகிக்கலாம். ஆனரபிள் ராமநாதன், ஸர். பொன்னம்பலம் முதலானவர்களுடன் சென்னை அரசாங்கக்கல்லூரியிற் கற்று மிக்க இளவயதிலேயே பீ. ஏ. பரீட்சையில்தேறிப் பட்டம்பெற்றனர். இவரை (Boy Graduate) பட்டதாரிப்பையன் என்று பலரும் குறிப்பிட்டுவந்ததாகக் கூறுவர். தமிழறிவிலும் சிறந்தவராகவே இவர் விளங்கினர். ஆனால் பண்டிதர்களிடத்தில் வரன்முறையாகக் கற்றனரென்று தெரியவில்லை. தமது தந்தையாரிடம் கேட்டுத் தெளிந்த தமது தமிழறிவை விருத்திபண்ணிக்கொண்டனர் போலும். அறிவுநலத்தைப் பேணிக்கொண்டதுபோலவே உடல் நலத்தையும் இவர் இளமையிற் பேணிவந்தனர். ஒரு முகம்மதிய பயில்வானிடம் தேகப்பயிற்சிமுறைகளைக் கற்று நாள்தோறும் அப்பியாசம் செய்துவந்தனர்.

பட்டம் பெற்றவுடனேயே தபால் இலாகாவில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. ஆனால் தமது அறிவும் ஆற்றலும் பிரகாசிப்பதற்கும் தமது உயிராசையாகிய தமிழாராய்ச்சி பெருகுதற்கும் இவ்வுத்தியோகம் ஏற்றதன்றென முதலில் நினைத்தாரெனத் தோன்றுகிறது. ஏனெனில் சட்டப்பரீட்சைக்குப்படித்து பீ. எல். பரீட்சையில்தேறி, ஓர் ஆண்டு ரஜாப்பெற்று, மதுரையில் வழக்கறிஞர் தொழிலிலும் இவர் அமர்ந்திருந்தாரென அறிகிறோம். இவ்வாறு அமர்தற்குமுன் மதுரையில் அமெரிக்கன்மிஷன் ஆஸ்பத்திரியிலிருந்த தமது அம்மானாகிய டாக்டர் பொன்னையாவின் புதல்வி ஸ்ரீமதி செல்லம்மாளை 1876-ல் மணம்புரிந்தனர். மதுரையிலே ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுடைய நட்பையும் இவர் பெற்றனர்.

ஆனால் வழக்கறிஞர் வேலையிலுள்ள இடர்ப்பாடு இவரை மீண்டும் தமது முன்னுத்தியோகத்திற்கே திரும்பும்படிசெய்துவிட்டது. ஓரளவு லௌகிக சௌகரியங்கள் இருந்தாலன்றி இலக்கிய ஆராய்ச்சி இயலாதல்லவா? இந்தச் சௌகரியங்களை இவ்வுத்தியோகம் தந்ததனால் ஒருவாறு அதில் திருப்தியுங்கொண்டார். தபால் இலாகாத்துறையிலேயே தமது ஆயுள்முழுதுங் கழிக்கவும் அவகாசம் நேர்ந்தபொழுது தமிழாராய்ச்சிசெய்துவரவும் இவர் உறுதிபூண்டனர். சிந்தையின் நிறைவே சிறந்த செல்வமென்று எண்ணினர். தமது உத்தியோகமுறையில் இவர் மேன்மேலும் சிறப்பெய்தினர். இவரது அறிவாற்றல் முதலிய தகுதிகளும், நேர்மையும், சிரத்தையும் இவரது முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தன. அதிசீக்கிரத்தில் டிவிஷனல் மேலதிகாரி என்ற பதவியை அடைந்தனர். இப்பதவியின் நிர்வாகமுறையில் தமிழ்நாட்டிற் பலஇடங்களுக்கும் இவர் சுற்றுப்பிரயாணம் செய்யும்படிநேர்ந்தது. இப்பிரயாணங்களால் தமிழாராய்ச்சிக்குரிய சில வசதிகள் எதிர்பாராதவண்ணம் இவருக்கு எளிதிற் கிடைத்தன.

அக்காலத்திற் சங்கஇலக்கியங்களிற் பெரும்பாலன அச்சில் வெளிவரவில்லை; ஏட்டுப்பிரதிகளாகவே சிற்சிலரிடத்தில் அருகியிருந்தன. இவைகளின்றி இலக்கியக்கல்வியும் இலக்கிய ஆராய்ச்சியும் நடைபெற இயலாது. ஆகவே சென்ற இடங்களிலெல்லாம் அச்சில்வாராத தமிழ்நூல்களின் ஏட்டுப்பிரதிகளைத் தேடிப்பெறும் முயற்சியைக் கைக்கொண்டனர். ஏராளமான ஏட்டுப்பிரதிகளைத் தொகுத்துவைத்திருந்தனர். அவைகளைக் கடிதத்திற் பெயர்த்தெழுதுவதற்கு அப்பாவுப்பிள்ளையென்ற ஒருவரை அமர்த்தித் தம்முடனேயே 20 வருஷகாலமாக வைத்துக்கொண்டிருந்தனர். அப்பாவுப்பிள்ளையும் ஏடுகளைப் பிரதிசெய்தும் தம் எஜமானர் சொல்லும் விஷயங்களைக் குறித்துவைத்தும், அவர் எழுதியவற்றைச் சுத்தப்பிரதிசெய்தும் உதவிவந்தார். தாம் தேடிப்பெற்ற அரிய பிரதிகளைத் தட்டுத்தடையின்றிப் பதிப்பாளர்களுக்குக் கொடுத்துப் பயன்பெறவும்செய்தார். உதாரணமாக டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்குப் பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய பண்டையிலக்கியப்பிரதிகளை உதவிப் பேருபகாரம்புரிந்தனர். கனகசபையைப்போன்று விரிந்த மனப்பான்மை தமிழறிஞர்களுக்கு இருந்திருக்குமாயின் எத்தனையோ பழந்தமிழ்நூல்களை நாம் இன்று இழந்திருக்கமாட்டோம். ஏட்டுப்பிரதிகள்கொடுத்து உதவிபுரிந்ததேயன்றித் தாம் அருமையாகக் கண்டுதெளிந்த ஆராய்ச்சியுண்மைகளையும் தமிழறிஞர்களுக்குத் தாராளமாக வெளியிட்டுவந்தனர். உண்மையெனத் தெளிந்தவற்றை மறைத்துவைப்பதனாற் சிறிதும் பயனில்லை; ஆராய்ச்சி பெருகாது; தமிழறிவு பரவாது. இவ் விளைவினை நன்குணர்ந்திருந்தனர் நம் கனகசபை.

தமது 23-வது வயதில் (1884-ல்) தந்தையையும், அடுத்த ஆண்டில் தாயையும், இழந்தார். தமது குழந்தைகளில் இருவரையும் சில்லாண்டுகளில் இழந்தார். இத்துக்கநிகழ்ச்சிகள் இவரை மேன்மேலும் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடச்செய்தன. உண்மை

யான தமிழுணர்ச்சிக்கும், தேசசரித்திரவுணர்ச்சிக்கும், 'சிலா சாஸன அறிவு இன்றியமையாதெனவுணர்ந்து, சாஸனங்களைக் கற்கத்தொடங்கினர். சுற்றுப்பிரயாணங்களிற் கோயில்களைப் பார்வையிட்டும் ஆங்காங்குள்ள சிலாசாஸனங்களைக் குறித்தெழுதித் தொகுத்தும்வந்தனர். சிலாசாஸனங்கள் பலவற்றை அப்பாவுப் பிள்ளையைக்கொண்டு பிரதிசெய்வித்தனர். அன்றியும், தாம் செல்லுமிடங்களிலுள்ள சமுதாய வழக்கவொழுக்கங்களையும் மக்களின் த்தாரின் சிறப்பியல்புகளையும், சரித்திரவிஷயங்களையும் நேரிற் கண்டும் கேட்டும் விசாரித்தும் தெரிவதை வழக்கமாகக்கொண்டனர்.

தமது தமிழ்க்கல்வியின் ஈடுபாட்டில் ஆங்கிலக்கல்வியைப் புறக்கணித்தவரல்லர். ஆங்கில வியாசங்கள் அடிக்கடி எழுதிவந்தனர். தமிழ்ச்செய்யுட்களை ஆங்கிலத்திற் செய்யுட்களாக மொழி பெயர்த்து இயற்றியும் வந்தனர். இவர் மனத்தில்

> "திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ்
> செய்தல்வேண்டும்"

என்ற கருத்துத் தோன்றி ஆங்கிலமொழிபெயர்ப்புமுயற்சியில் இவரைத் தூண்டியிருத்தல்வேண்டும். ஆங்கிலத்திலும் நல்ல செய்யுட்களை இயற்றவல்லவரென்பது எட்வர்ட் இளவரசர் நமது நாட்டுக்கு விஜயஞ்செய்தபொழுது இவர் ஆங்கிலத்திற்பாடிய வரவேற்புக்கவிகளால் விளங்கும். இவை இளவரசர்வந்த அன்று மெயில்பத்திரிகையில் வெளிவந்தன. இக்கவிகள் அக்காலத்திற் பல அறிஞராலும் போற்றப்பட்டன.

கனகசபை தமது தமிழ்க்கல்வி, தேசசரித்திரவுணர்ச்சி, சமுதாய சரித்திரஞானம், சிலாசாஸன ஆராய்ச்சி, ஆங்கிலக்கல்வி முதலிய அனைத்தும் பயன்படத்தக்க சிறந்த நூலொன்றை எழுதித் தமக்கு அழியாப்புகழும் தமது தாய்மொழிக்கு மறக்கவொண்ணாப் பெருந்தொண்டும் இயற்றினர். "1800 வருஷங்கட்கு முந்திய தமிழர்" என்ற நூலே இங்கே குறிப்பிடப்படுவது. இந்நூலின்

பகுதிகள் 1895 முதல் 1901 வரை "Madras Review" என்ற சிறந்த ஆங்கிலப்பத்திரிகையில் வெளிவந்தன. 1892-ல் ஸ்ரீ சாமிநாதையரவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்ட சிலப்பதிகாரத்தைப் பெரும்பாலும் ஆதாரமாகக்கொண்டு இவ்வாராய்ச்சிப்பெருநூல் எழுதப்பட்டது. இந்நூலில் தமிழ்நாடு, தமிழ் இலக்கியத்தின் தொன்மை, சிலப்பதிகாரத்தின்காலம் முதலியனவும், தமிழகத்தின் நிலவிவரணம் எல்லைப்புறநாடுகள் முதலியனவும், அயல்நாடுகளோடு நடந்த வாணிபத்தின் தன்மை முதலியனவும், சோழர், பாண்டியர், சேரர், குறுநிலமன்னர் முதலியோர் சரிதமும், தமிழசமுதாயத்தின் வாழ்க்கைநிலைமை முதலியனவும் விரிவாய் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன. குறள், சிலப்பதிகாரம், மணிமேகலையென்ற நூல்களின் இயல்பும், சங்கப்புலவர்கள் சரிதமும், தமிழ்நாட்டில் வழங்கிய தத்துவதரிசனங்கள், சமயபேதங்கள் முதலியனவும் மிகத் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளன.

இப்பகுதிகளைக் கற்றுணர்ந்தோர் கனகசபையின் அறிவாற்றலையும், கல்விப்பெருமையையும், ஆராய்ச்சித்திறத்தையும் எழுத்துவன்மையையும் பெரிதும் புகழ்ந்து பாராட்டினர். இவைகள் ஆராய்ச்சிநிரம்பியனவாயிருந்தபோதிலும், கற்போர் உளத்தைக் கவரத்தக்க இனிமையான அழகிய நடையில் நயம்பெற எழுதப்பெற்றிருந்தன. தமிழாராய்ச்சியின்போக்கு இவ்வகையாயிருத்தல் வேண்டும் என அறிவுறுத்தி ஆராய்ச்சியாளரின் கண்களை இவை திறந்தன. பலரும் இவற்றிற்கண்ட நெறியையே பின்பற்றி ஆராய்ச்சிகள் செய்துவரலாயினர். இவற்றிற்கூறிய முடிவுகளையே அடிப்படையாகக்கொண்டு பல ஆராய்ச்சிகளும் எழுந்தன. இவற்றின் நயங்களை முற்றும் அனுபவித்த ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் இவற்றைத் தொகுத்து நூல்வடிவில் வெளியிடவேண்டுமென விரும்பினர். அவ்விருப்பிற்கிணங்கி 1904-ல் அச்சியற்றி நூலை ஸ்ரீ மணி ஐயரவர்களுக்கே கனகசபை சமர்ப்பணஞ்செய்தனர்.

மதருஸ் ரெவியூவில் வெளிவந்ததை வாசித்த சில அன்பர்கள் சர்வகலாசாலையோடு இவரைத் தொடர்புபடுத்த விரும்பினார்கள். பி.ஏ., எம்.ஏ. முதலியவற்றில் பரீட்சையதிகாரியாகச் சில ஆண்டுகள் இவர் நியமனம்பெற்றார். ஸர். வி. பாஷ்யமையங்கார், ஸர். ஸி. சங்கரன்நாயர் முதலிய பிரமுகர்கள் இவர்க்குக் கலாசாலைத் துணையாளர் (F. M. U.) என்ற பதவியை அளிக்க முயன்றனர். இம் முயற்சி நிறைவேறுமுன் விதி குறுக்கிட்டுவிட்டது.

ஆனால் புலவர்நன்மக்களது பேரவையாகிய மதுரைத்தமிழ்ச் சங்கம் இவரைப் போற்றிப் பாராட்டமுற்பட்டது. 1905-ல் இச் சங்கத்தின் வருஷாந்தர மகாநாட்டில் இவர் தலைமைதாங்கினார். அத்தலைமையிலே தமது இனிய பிரசங்கத்தால் கேட்டோர் மனத்தைக் கனிவித்தனர். இச்சங்கத்திலிருந்து வெளிவரும் செந்தமிழ்க்கு அரிய பல விஷயங்களைக் குறித்து ஆராய்ச்சியுரைகள் எழுதித் தமிழறிஞர்களை மகிழ்வித்தனர். ஆங்கிலத்திற்போலவே தமிழிலும் இவர் அழகிய நயமான நடை எழுத வல்லவரென்பதை இக்கட்டுரைகள் தெளிவிக்கின்றன.

கனகசபைச் செப்புப் பெரும்புகழ் விளைத்த அரிய நூலினை வெளியிட்டதன்பின்னர் அவர் நீடித்த காலம் உயிர்வாழவில்லை. ஆனால் அவரது ஆராய்ச்சியுள்ளமோ எத்தனையோ பொருள்களைப் பற்றி நூல்கள் எழுதவேண்டுமென்று கனவுகண்டுகொண்டிருந்தது. சோழவமிசத்தைக் குறித்து ஒரு சரித்திரநூல் எழுதவேண்டுமென்று எண்ணி அதற்குரிய குறிப்புக்களைத் தயார்செய்துவைத்திருந்தனர். இவற்றிற் சில செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடப்பட்டன. சிலாசாஸனங்களை முறைப்பட ஆராய்ந்து குறிப்புக்கள் எழுதிவைத்தனர். இவற்றுள் ஒன்றும் இப்போது கிடைக்கவில்லை.

மேற்கூறிய முயற்சிகளெல்லாம் தமக்கு அவகாசம் கிடைத்தபோது செய்தனவேயாம். தமது உத்தியோகக் கடமையிற் சிறிதும் இவர் தவறியவரேயல்லர். தபால் இலாகாத்தலைவர் இவரைச் சிலாகித்து இவரது பெருந்தகுதியை நன்குமதித்திருந்தனர்.

தமது உத்தியோகமுறையில் இவர் காஞ்சிபுரத்திற்குச் சென்றிருந்த போது 21—2—1906-ல் திடீரென்று உலகவாழ்வை நீத்தனர். தமிழன்னை தனது அரும்பெறற்புதல்வருள் ஒருவரை இழந்து விட்டாள்.

சுமார் ஐந்தேமுக்கால் அடி உயரம். பயிற்சியால் உரம்பெற்று இறுகிய தேகக்கட்டு; அகன்ற மார்பு; பரந்த முகம்; நெற்றியிற் சந்தனப்பொட்டு; நன்றாகவளர்ந்து படிந்த மீசை; வெண்மையான உடை; அதாவது வெள்ளைக் கால்சராயுடன் கழுத்துவரையும் பொத்தானிட்டுமாட்டிய வெள்ளைச்சட்டை; ஜரிகைத்தலைப்பாகை. இவர் உருவத்தை ஒருவாறு நம்மனத்தில் நிறுவுவதற்கு இவை போதும்.

இவரது இனிய பண்புகள் மிகப்பல. கோபமென்பதையே அறியாதவர். குழந்தைகளிடத்தில் மிக்க பிரீதியுடையவர். தம் கீழ் உத்தியோகஸ்தர்களை மிக்க அன்போடு நடத்திவந்தார். தயாளசிந்தையுடையவர். அவர்கள் துன்பப்படும்போது பண முதலியனகொடுத்து உதவிவந்தனர். சில ஆண்டுகள் இவர் வலங்கிமான் ஜோஸியர் உபதேசத்தால் யோகாப்பியாசம் செய்தனர். இதனால் உளத்தை அடக்கி ஒருமுகப்படுத்துதலில் நல்ல பயிற்சிபெற்றிருந்தனர்.

இவ்வரிய பண்புகளையெல்லாம் நாம் காலகதியில் மறந்துவிடலாம். ஆனால் இவர் செய்துள்ள அரும்பணியை நாம் மறக்கமுடியாது. தமிழ்மக்களது பண்டைநாகரிகச் சிறப்பை முதன்முதற் புலப்படுத்தி, தமிழிலக்கியப்பெருமையைத் தெள்ளிதின் உணர்த்தி, தமிழர்சரித்திரத்தை நன்கு விளக்கி, தமிழ்ப்பெருநூல்களைத் தேடித் திரட்டியுதவி, தமிழாராய்ச்சியையே தமது பொழுதுபோக்காகக்கொண்ட இந்த அருங்கலைவிநோதர் தமிழன்னைக்கு ஊன்றுகோல்போலக் கைகொடுத்துதவி அவளைத் தாங்கியெடுத்தவருள் ஒருவர் என்பதில் ஐயமென்ன?

கம்பராமாயணசாரம்

உத்தரகாண்டம்

கசுசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

சு-வது இராவணன்பிறப்புப்படலம்

இராவணன் பிறந்தது முதலிய வரலாறுகளைக் கூறுவது.

இராவணன்வரலாறு கூறும்படி இராமன் வேண்ட
அகத்தியன் கூறுதல்

அரக்கர்பிறப்பு முதலாக அவர்கள் பாதாளம்போய் ஒளித்துவாழ்தல் இறுதியாக அகத்தியமுனிவன் கூறக்கேட்ட இராமன், இராவணன் பிறப்பையும் அவன் செயல்களையும்பற்றிக் கூறும்படி வேண்டிக்கொள்ள, அந்த முனிவன் கூறுவானுனன்.

தந்தையைக் காணச்செல்லும் குபேரனைக் கண்டு
சுமாலி சிந்தைசெய்தல்

'இராக்கதர் பாதாளத்திற் குடிபுகுந்து நெடுங்காலமானபின், சுமாலி, தன்மகள் பேரழகுடைய கைகசிக்குத் தக்க மணமகனைத் தேடுதற்காக அவளைக் கூட்டிக்கொண்டு பூமிக்கு வந்தான். அப்போது, இலங்கைமன்னனுயிருந்த குபேரன், புட்பகவிமானத்திலே பிராமணரும் இயக்கரும் தேவரும் சூழப்பெற்றவனுய், அவன் தந்தை விச்சிரவசுமுனிவனைக் காணுதற்குச் சென்றுகொண்டிருந்தவனைக் கண்டான். கண்டவன், "புலி வாழ்ந்த இடத்தே பசு வாழ்தல்போல, வீரசிரேட்டரான மாலியவான் முதலியோர் ஆண்ட இலங்கையை ஆண்மையற்ற இவன் (குபேரன்) ஆள்கின்றுனென்று நினைந்து வருந்தினுன்.

கைகசி விச்சிரவசுவை அடைதல்

வருந்தினவன், தன் மகளைநோக்கி, "ம... ட்சுமிபோன்ற பேரழகுடையவளே! தக்க குணமுடைய ஒரு பெண் பிறந்தால், அவள் தன்

தாய்தந்தையர் குலங்களை மேம்பட்டுவிளங்கச்செய்வாள். நீ அவ்வாறுசெய் தற்குத் திக்குப்பாலகருளொருவனும் சங்கநிதி பதுமநிதிகள் ஏவல்செய்யப் பெற்றவனும் புட்பகவிமானமுடையவனும் இலங்கைமன்னனுகவாழும் இவ்னை (குபேரனை)ப்பெற்ற விச்சிரவசுமுனிவனை மணப்பாயாக" என்று சொன்னன். அவள், தன் தந்தையின் குறிப்பறிந்து, அவன் ஆணையைத் தலைமேலேற்று, "என் தந்தைமனக்குறையை நான் நிறைவேற்றமுயல் வேன். இம்முயற்சியில் நன்று வருக, தீது வருக, யாதுவரினும் வருக" என்று உறுதிசெய்துகொண்டு, விச்சிரவசுமுனிவன் இருக்குமிடத்தை அடைந்து, அவன்முன்னே காலின்பெருவிரலால் நிலத்தைக் கீறிக்கொண்டு நின்றாள். அவன், அவளை அருட்கண்கொண்டுபார்த்து, "நீ யார்மகள்? உன்பெயர் யாது? என்னகாரியமாகவந்தாய்? என்று வினவ, அவள், "நான் சுமாலியின்மகள்; என்பெயர் கைகசி; நான் கருதிவந்த காரியத்தை ஊகித்தறிந்துகொள்" என்று விடைகூறினள். அவன், "நீ பிள்ளைப்பேறு கருதிவந்தாய், நீ வந்தகாலம் தீயதாதலால், உன் பிள்ளைகள் கொடியோ ராய் உலகத்தோர்க்குத் துன்பஞ்செய்வோராயிருப்பார்" என்று கூற, அவள் "உன்னை அடைந்து உன் அருள்பெற்ற எனக்கு உன் குணத்துக்கு ஒவ்வாத பிள்ளைகள் பிறக்கலாமோ?" என அவன், "உன் குமாரரில் இளையவன் பேரறிவுடையவனுயிருப்பான்" என்றான்.

இராவணாதியர் பிறந்தல்

அன்றிரவில் விச்சிரவசுவின் அருள்பெற்ற அவளுக்கு முதற்சாமத்தில் பத்துத்தலையும் இருபதுகைகளுமுடைய இராவணன் பிறந்தான். (இரண் டாம்சாமத்தில்) பூமிமுழுவதையும் விழுங்கினும் நிறையாத வயிறும் பிறை போலும் பல்லும் பிலம்போலும் வாயும் பெருங்கண்களும் நெடுங்குன்று போன்று நீண்ட பெருங்காத்திரமும் உடையவனும் ஒருகாலத்தும் குறையாத கொடும்பசியுடையவனுமான கும்பகருணன் பிறந்தான்; (மூன்றாம்சாமத்தில்) காலன் ஆண்வடிவம் நீங்கிப் பருத்த கழுத்தும் தடித்த இடையும் வெடித்த குரலுமுடைய பெண்ணுப்பிறந்தாற்போன்ற சூர்ப்பநகை பிறந்தாள். (நான்காம்சாமத்தில்) தந்தைக்குத்தகுந்த மைந்தனெனத்தக்கவனான வீபீடணன் முந்தியமூன்று தீயோருக்குப் பிறப்பிடமானதனுல் அசுத்தமுற்ற வயிறு சுத்தமுறும்படி பிறந்தான்.

அவர்கள் செயல்கள்

பாம்புக்குப் பால்புகட்டப்புகட்ட விடம் விளைதல்போல இராவண னுக்கு மனுதருமம் வேதம் கலை முதலிய நூல் புகட்டப்புகட்டக் கெடுமதி வளரலாயிற்று.

நீங்காத பசிநோயுடைய கும்பகருணன் (தன் தந்தையின் இனத்தவரா கிய) முனிவர்களையே கொன்று தின்றுவந்தான். பிராமணகுலத்துப்பெண்ணு யிருந்தும் பெருவலிமையுடைய சூர்ப்பநகை, ஆறுப்பிறந்தாரெல்லாரை யும் பின்தொடர்ந்து இணங்கினவர்களோடுசேர்ந்து இன்புற்றும் இணங்காத வர்களைக் கொன்று தின்றும் வந்தாள். பொய் களவு கொலை முதலிய தீய வினைகளை நீக்கி, மெய் தயை தரும முதலிய நல்வினைகளைச் செய்துவந்தான் விபீடணன்.

கைகசி குபேரனைக்காட்டி இராவணனுக்குக் கூறுதல்

இவ்வாறு இந்நால்வரும் வாழ்ந்துவந்தகாலத்திலே, ஒருநாள், தன் தந்தையாகிய விச்சிரவசுமுனிவனைக்காணும்ஆசையினுல் குபேரன் வந்தான். அவனைக் கைகசி இராவணனுக்குச் சுட்டிக்காட்டி, "இவன் உன் தமையன். தவஞ்செய்து புட்பகவிமானமும் சங்கநிதி பதுமநிதிகளும் பெற்றிருக் கிறுன். உன் முன்னோர் ஆண்ட இலங்கையை ஆள்கின்றுன்" என்று கூறி னுள். அப்போது இராவணன், "தவஞ்செய்து இவனினும் மேலானவனுத லாவது. ஒத்தவனுதலாவது செய்வேன்" என்று கூறி, மனம்வருந்திக் கொண்டிருந்த தாயைத் தேற்றினுன்.

இராவணுதியர் தவஞ்செய்தலும் வரம்பெறுதலும்

இராவண கும்பகருண விபீடணர் மூவரும் தவஞ்செய்தற்குக் கொன் றைவனமென்ற ஒரு தபோவனத்தை அடைந்தார்கள். கும்பகருணன், கொதிக்கும் கோடைக்காலத்திலே நாலுபுறமும் மூட்டிய தீயும் மேலே சூரியனுமாகிய பஞ்சாக்கினி(யென்ற அஞ்சுவகை அக்கினி) மத்தியிலேநின் றும், மழைக்காலத்திலே மழையில் நனைந்துநின்றும், குளிர்காலத்தில் தண்ணீ ருள்நின்றும் இரும்புத்தூண்போல அசையாதவனுய்ப் பதினுயிரமாண்டு அருந்தவஞ்செய்தான். விபீடணன், ஒருகால் மேழ்நோக்கி மண்ணில் ஊற

ஒருகால் மேல்நோக்கி விண்ணில் உற நின்று தவம்புரிந்தான். இராவணன், (உண்ணாவிரதியாய்) ஒவ்வோராயிரம் ஆண்டுகழிய ஒவ்வொரு தலையாக ஒன்பது தலைகளை அறுத்து ஓமத்தீயிற் பலியிட்டான். அவன் பதினாயிரம் ஆண்டின் முடிவில் பத்தாவது தலையை அறுக்கத்தொடங்கிய போது, பிரமதேவன் பிரசன்னமாகி, "தவஞ்செய்தலில் நின்னைநேர்வார் நீயன்றி வேறொருவருமில்லை. உன்கையாலரிந்த உன்தலைகள் முன்புள்ளவை போல முளைப்பனவாக" என, அவைகள் முன்னினும் அழகுடையவைகளாக எழுந்தன. பின்பு, பிரமன், "நீ வேண்டும் வரங்களெல்லாவற்றையுங் கொடுப்பேன். வேண்டிக்கொள்" என, இராவணன், மனிதரைப் பொருட்படுத்தானாய் (அவர்களால் வெல்லப்படாமையைவேண்டாமல் தனக்கு வேண்டியவைகளெல்லாவற்றையும் கூறிப் பெற்றுக்கொண்டான். பின்பு, பிரமன், விபீடணனுக்குப் பிரசன்னமாகி "உனக்கு வேண்டும்வரம் கேட்டுக் கொள்" என, அவன் "எனக்கு என்னதுன்பம் நேர்ந்தாலும் அதை நீக்குதற்கு அறநெறிதவறித் தீயகாரியம் யாவதும் செய்யாதொழிவேனாக. எவரும் என்னை வெல்லமாட்டாராக" என்றான். அவன் வேண்டியவரங்களை யருளியதோடமையாமல் "நீ என்றும் இறவாதிருக்கும் வரமும் கொடுத்தேன்" என்று கூறினான் பிரமன்.

தேவரும் முனிவரும், கும்பகருணன் தவஞ்செய்தலைக்கண்டு, இயல்பாகவே நம்மையெல்லாம் நடுங்கச்செய்யும் கொடுந்தொழிலுடைய இவன் வரமும் பெற்றுவிட்டால் நமக்குப் பிழைப்பில்லையென்றெண்ணிப் பிரமனை யடைந்து வணங்கி "முன்னமே கொடியோனாயுள்ள கும்பகருணனுக்கு வரங் கொடுத்தாயானால், எங்களைக் கெடுத்தாயாவாய்" என்று கூறினார்கள். பிரமன், சரசுவதியைநோக்கிப் "பொல்லாத கும்பகருணன் என்னிடம் வரங் கேட்கும்போது அவனை உறக்கம்வேண்டுமென்று உரைக்கும்படிசெய்வாயாக" என்று கூறி, அவள் இசைவுபெற்றபின், கும்பகருணனிடம்சென்று "உனக்கு வேண்டியதை உரை" என, அவன் மயக்கவசத்தனாய், "உறக்கம் வேண்டும்" எனத் "தந்தேன்" என்று கூறிச் சென்றான். அவன் போன பின்பு, கும்பகருணன், மயக்கந்தெளிந்து தான் உறங்கும்வரம் வேண்டிப் பெற்றது தேவர்செய்த மாயத்தாலென்றெண்ணி வருந்தி நிகழ்ந்ததைத் தமையனிடமும் தம்பியிடமும் கூறினான். மூவரும் தவஞ்செய்த வனத்தை விட்டுநீங்கி முன்பிருந்த வனத்துக்குத் திரும்பிப்போய்ச்சேர்ந்தார்கள்.

குபேரனிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றும்படி சுமாலி இராவணனைத் தூண்டல்

திருமாலினால் துரத்தப்பட்டுப் பாதாளத்தில் ஒளித்துவாழ்ந்துகொண்டிருந்த மாலியவான் முதலிய இராக்கதர், இராவணாதியர் வரங்கள்பெற்றிருப்பதைக்கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்று அவர்களிருக்குமிடம் வந்துசேர்ந்தார்கள். மாலியவானும் சுமாலியும் இராவணனையும் அவன் தம்பியர் இருவரையும்நோக்கித் "திருமாலுக்குத் தோற்றோடியொளித்த அரக்கரெல்லாம் தலையெடுக்கும்படி தோன்றினீர்கள்" என்று புகழ்ந்து பாராட்டித் தழுவிக் கொண்டார்கள். பின்பு (இராவணனுடைய தாயைப்பெற்ற பாட்டனை) சுமாலி, இராவணனைநோக்கித் "தமையன் மாலியவானும் தானும் (சுமாலியும்) தங்களைச் சார்ந்தோரும் போரில் திருமாலால் துரத்தப்பட்டுப் பாதாளத்தில் வாழ்வதையும் தாங்கள் அரசாண்ட இலங்கையைக் குபேரன் ஆள்வதையும் கூறி, "அந்த இலங்கையை நீ பெறவேண்டும். அதை உனக்குக் கொடுத்தற்குக் குபேரன் இசையவில்லையானால் நீ வலிமையினால் அந்த நகரத்தைக் கைப்பற்றவேண்டும். இல்லையானால், தேவர்கள் சிரிப்பார்கள்" என்று கூறினான். தன் மாதாமகன் (தாயைப்பெற்ற பாட்டன்) இவ்வாறு கூறக்கேட்ட இராவணன்,"அவன் (குபேரன்) என்தமயன் (என்தந்தைக்கு என் மாற்றாந்தாய்வயிற்றிற்பிறந்த அண்ணன்). அவனை எவ்வாறு பகைத்தல்கூடும்?" என்று கூற, பிரகத்தன்* "சூரர் உறவுபார்ப்பரோ? தேவர்கள் போரிலே அசுரர்களைச் சகோதரரென்று பாராமல் கொல்லவில்லையோ?" என்று கூறினான்.

குபேரன் இராவணனுக்கு இலங்கையைக் கொடுக்க இசைதல்

அவ்வாறுகூறிப் பிரகத்தனைநோக்கி, இராவணன், "நீயே போய் இலங்கையைத் தரும்படி குபேரனிடம் கூறிவா" என்றான். அவன் இலங்கைக்குப்போய்க் குபேரனைக் கண்டு, "முன் இலங்கையை ஆண்டவர்கள் என் பாட்டன்மார். ஆதலால் இலங்கைக்குரியவன் யானே. என் உறவு வேண்டுமானால், இலங்கைநகரை என்னிடம் தந்திடவேண்டும்" என்று

---

* பிரகத்தன் - இராவணசேனாபதி, சுமாலியின் புத்திரன் (அபிதான சிந்தாமணி).

உன்னிடம் கூறும்படி இராவணன் சொன்னானென்றான். குபேரன், ஆழ்ந்து ஆராய்ந்து கூறுவானாய், "என் நகரமும் என் அரசும் என்தம்பியுடைமையன்றோ! என் தம்பி சொன்னபடி செய்வேன்" என்று சொல்லிப் பிரகத்தனைத் திருப்பியனுப்பினான்.

குபேரன் இலங்கையைவிட்டு இமயமலையில்வாழ்தற்குப் போதல்

பின்பு, குபேரன், தன் தந்தை விச்சிரவசுவினிடம் நிகழ்ந்ததைத் தெரிவித்தான். அவன், "பிரமனிடம்பெற்ற வரபலத்தினால் பழியுண்டாகும்படி உலகத்தாரை வருத்தச்செய்துவருகின்ற இராவணனுக்கு இலங்கையைக் கொடுத்துவிடு. கிழக்கும் மேற்கும் கடல்களே எல்லையாகவுடைய இமயமலை, பரதகண்டத்தின் (இந்தியாவின்) வடபாகத்தில் இருக்கின்றது. அது, பார்வதிதேவியை மகளாகப்பெற்ற பாக்கியமுடையது. அந்தத் தேவியும் சிவபிரானும் வாழும் கயிலைமலை ஒருபக்கத்தில் அமரப்பெற்றது. அந்த இமயமலைக்குச்சென்று அங்கே உனக்கு உவப்பான ஒரு பிரதேசத்திலே வாழ்வாயாக" என்றான். குபேரன் அதற்கிசைந்து சுற்றத்தார்முதலியோரோடு இலங்கையைவிட்டுப் புறப்பட்டுப் புட்பகமேறி இமயமலைக்குச் சென்றான்.

இராவணனும் இராக்கதரும் இலங்கையிற் குடிபுகுதல்

இராவணன் இலங்கையை அடைந்து அங்கே முடிசூடி அரசாள்வானானான். பாதாளத்திலே பதுங்கி ஒதுங்கி ஒளித்திருந்த இராக்கதர் இழந்த பழந்தனத்தை யெய்தினவர்போன்று எக்களித்து இலங்கையையடைந்து அங்கே குடியிருப்பாராயினர்.

சூர்ப்பநகைமணம்

சூர்ப்பநகை, "நான் அதிபலை, (அதிக பலமுடையவள்); தேவமாதர் அபலைகள் (பலமில்லாதவர்); நான் பெருத்த இடையையுடையவ்ள்; அவர்கள் தங்கள் தனங்களைக்கூடத் தாங்கக்கூடாத சிறுத்த இடையுடையவர்; நான் உலகெங்குஞ்சென்று திரும்பும் வேகம்மிகுந்த வன்னடை (வன்மையான நடை)யுடையவள்; அவர்கள் மென்னடையுடையவர்கள்;" என்று தேவமாதரைப் பழிப்பவளாய் அகந்தைமிகுந்தவளாயிருந்தாள். அவளை வித்துருசிங்கனென்பவன் விவாகஞ்செய்துகொண்டான்.

இராவணன் மணம்

ஒருநாள் இராவணன் வேட்டையாடப்போயிருந்த வனத்திலே, மயன் (அசுரத்தச்சன்) என்பவன் தன்மகள் மண்டோதரியோடு எதிர்வரக் கண்டு, "யாருமில்லாத இந்த வனத்திலே இவளோடு வந்த நீயார்?" என்று இராவணன் கேட்டான்.

"நான் அசுரராசன்மகன். என் இருப்பிடம் எமபுரி. என்மனைவி தருச்சனையென்பவள். எங்களிருவருக்கும் பிறந்த இவள்பெயர் மண்டோதரி. மாயாவி துந்துமியென்பவர் இவளுடன் பிறந்த என்புத்திரர். இவள் அழுக்கும் குணத்துக்கும் எற்ற வரனை யெங்குந்தேடிக் காணமல் இந்த வனத்துக்கு வந்தேன். *பெண்களுக்குத் தக்க வரராவார் அழகும் எவ்வனமுமுடையராயிருக்கவேண்டுமென்று பெண்களும், பெருஞ்செல்வராயிருக்க வேண்டுமென்று தாயரும், கல்வியும் அறிவும் நிறைந்தவராயிருக்கவேண்டு மென்று தந்தையரும், நல்லகுலத்தினராயிருக்கவேண்டுமென்று சுற்றத்தாரும் விரும்புவார்கள். †நற்குடிப்பிறப்பும், குற்றமற்றஅழகும், விரிவானகல்வி கேள்வியும், (நீரோடு கலந்தபாலில்) நீரை நீக்கிப் பாலைக்கொள்ளும் அன்னம்போல(ப் பருப்பொருளொடுகலந்த நுண்பொருளில் பருப்பொருளை நீக்கி) நுண்பொருளைக்கொள்ளும் அறிவும் ஆகிய நான்கும் ஒருசேர உடையவர் இவ்வுலகத்திலே இடையார். (அப்படிப்பட்டவரே வரராதற்கு உரியார்.

---

* குலம்வேண்டு மென்றிருப்பர் குலத்துள்ளார்,
கல்வியினுற் குறையா ஞானப்
பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்,
பரந்தபெருஞ் செல்வம் உள்ள
தலம்வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள்,
எவ்வனமும் அழகும் சார்ந்த
நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழற்
கன்னிமார் நலத்தின் மிக்கார்.

தலம் - (வரனுடைய) வீடு (தமிழகராதி). நலம் - நன்மை. நாறுகுழல்- மணக்குங்கூந்தல் (உடைய). நலம் - அழகு.

† பண்புடைய குடிப்பிறப்பும் பழிப்பில்லாப் பேரழகும் பரந்தகேள்வி
நுண்பொருளை நீரொழிபப் பால்நுகரும்அன்னம்போல் நோக்கித்தீரும்

அவர்கள் கிடையாத இந்த உலகத்திலே) பெண்பெறுவதுபோலத் துன்பந் தருவது ஒன்றுமில்லை" என்று விடையளித்து "உன்பேரழகையும் எவ்வனத்தையும் நான் கண்கூடாகக் காண்கின்றேன். ஊரும் பேரும் குலமும் நலமும் கூறுவாயாக" என, இராவணன், "பிரமதேவன் என் பிரபிதாமகன் (-கொள்ளுப்பாட்டன் - தந்தையைப்பெற்ற பாட்டனுக்குத் தந்தை). நான் இலங்கையரசன்; ஆயிரம்வேதம் அறிந்தவன்; தசக்கிரீவனென்னும் பெயரினன்" என, மயன், 'இவளைப் பெற்று வளர்த்துவைத்திருந்த பயனைப் பெற்றேன்" என்றுகூறி மகிழ்ச்சியுடன் இராவணனுக்கு மண்டோதரியைத் தாரைவார்த்துக்கொடுத்துக் கல்யாணஞ்செய்வித்தான். பெண் கொடுத்ததோடு, பிரமதேவன்மேல் எவினாலும் பிராணனைக் கவர்ந்தே பெயரும் வேலாயுதத்தைச் சீதனமாகக் கொடுத்துச்சென்றான். இராவணன் மண்டோதரியோடு வனத்தினின்று திரும்பி இலங்கைக்கு வந்துசேர்ந்தான்.

கும்பகருண விபீடணர் மணம்

கும்பகருணன் வச்சிரசுவாலையையும் விபீடணன் சரமையையும் மணஞ்செய்துகொண்டார்கள்.

இராவண கும்பகருண விபீடணர் மக்கட்பேறு

இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிறந்த மகன் மேகமிடித்தாற்போல வீறிட்டழுததனால் அந்த மகனுக்கு மேகநாதனென்று இராவணன் பெயரிட்டான். பிறைபோலும் பல்லும் பிலம்போலும் வாயும் பெரிய கரிய மலைபோலும் பெருங் கருங் காத்திரமுமுடைய அந்த மகனுக்கு ஊனோடு சோறூட்டிச் சிறுநெருப்பைப் பெருநெருப்பாகும்படி வளர்த்தல்போலச் செவிலித்தாயர் செழுமையாக வளர்த்தார்கள். மேகநாதனுக்குப்பின் பிறந்த பிள்ளைகள் அதிகாயன் அக்ககுமாரனெனப் பெயர்பெற்றனர். கும்பகருணனுக்குக் கும்பன் நிகும்பன் என்போர் பிறந்தனர்.

ஒண்பொருளும் இந்நான்கும் உடையாரைக் கிடையாதிவ் வுலகந்தன்னிற்
பெண்பெறுகை போலிந்தப் பெரியதுயர் தானுண்டோ? பேசுங்காலே

பண்பு - பிறரியல்பறிந்துநடக்கும் நற்குணம் (தமிழகராதி). நுகரும் - உண்ணும். தீர்தல் - நிச்சயித்தல் - (தமிழகராதி). ஒண்மை - விளக்கம். பொருள் - அறிவு (தமிழகராதி).

கும்பகருணன் உறங்குதல்

கும்பகருணன், தனக்கு 'நித்திரைசெய்தற்கேற்ற மாளிகை ஒன்று நிருமித்துக்கொடுப்பாயாக' என்று வேண்ட, இராவணன் ஒருயோசனை அகலமும் இரண்டுயோசனை நீளமுமுடைய ஒரு பெருமாளிகையைத் தெய்வத்தச்சனான விசுவகருமனைக்கொண்டு நிருமிக்கச்செய்தான். கும்பகருணன் அதைக் கண்டு மகிழ்ந்து அதில் உறங்குவானானான்.'

ஆறாவது இராவணன்பிறப்புப்படலம் முற்றிற்று.

எ-வது வரையெடுத்தபடலம்.

இராவணன் கயிலைமலையைத் தூக்கியதைக் கூறுவது.

இராவணன் அளகாபுரிச்சோலையை அழித்தல்

'இராவணன், குபேரனுடைய இராசதானிநகரான அளகாபுரியை அடுத்திருந்த வனத்துக்குச்சென்று, அங்கிருந்த இயக்கர் தேவர் முனிவர்களைச் சிதற அடித்துத் துரத்தி அந்த வனத்தை அழித்தான்.

குபேரன் கூறிவிடுத்த அறவுரையை (தருமோபதேசத்தை)த் தூதன் இராவணனுக்குச் சொல்லுதல்

இராவணனுடைய வரம்பு மீறிய அதிக்கிரமச்செயல்களைக்கேட்ட குபேரன், அவனுக்குப் பின்வரும் நன்மதிகூறும்படி ஒரு தூதனை அனுப்பினான். அவன் இராவணனை அடைந்து, 'உன் தமையன் கூறியனுப்பியதைக் கேட்பாயாக' என்று கூறுவானானான்:—

"நீ செய்யக்கருதுஞ்செயல்களை அவைகள் அறநெறிக்கு மாறுபடாதவைகளா, பழிப்புக்கிடமில்லாதவைகளா என்று சிந்தித்துப்பார்த்துத் தெளிந்தபின் செய்வாயாக. தேவர்களையும், அந்தணரையும் சீறுவோர் யாவராயினும், அவர்கள் இம்மையில் தம் பழியைத் தாபித்து நாசமடைவர்; மறுமையில் பாவிகளடையும் நிரகத்தைச் சேர்வர். உன்னால் தேவர்கள் தாவரமின்றித் தளர்ந்து வருந்துவதைக்கேட்டேன், நீ அளகைச் சோலையை அழித்ததைக் கண்டேன். (பிறப்பினால் எனக்குத் தம்பியாயுள்ள நீ, செயலினும்) என்தம்பியானால், இப்படிப்பட்ட தீச்செயல்களை இனிச் செய்யாதொழிவாயாக."

"நான் இமயமலையின் சிகரமொன்றிலே சிவபிரானைநோக்கித் தவஞ் செய்தபோது, அந்தப்பெருமானுடன்வந்த உமாதேவியைக் கண்டு இந்த உத்தமி யாவளோ என்று கூர்ந்துநோக்கினேன். அதனால் அவள் கோபங் கொண்டு தீப்பொறிபறக்க நோக்க, அவளை நோக்கிய எனது இடக்கண் எரிந்து சாம்பலாய்விழுந்தது. நான் வெருண்டு வேர்த்து, விதிர்விதிர்த்து அந்த இடத்தைவிட்டு அகன்று இமயமலையிலே வேறோரிடத்துக்குப்போய்த் திரும்பவும் பெருந்தவம்புரிந்தேன். இருநூறுவருடங்கழிந்தபோது, சிவபெருமான் வெளிப்பட்டுக் காட்சியளித்து, "தவத்தில் நின்னை நேர்பவர் நீயல்லதில்லை. உன்னை ஒப்பவர் என்னையல்லதில்லை. நான் உன்னை என் தோழனாகக்கொண்டேன். நீ என்னை உன்தோழனாகக்கொள்வாயாக. என் தேவியால் நீ இழந்த கண்ணைப் பொன்னிறமுடைய கண்ணாகப் பெறுவாயாக" என்றருளினான்" என்று தூதன் கூறக் கேட்ட இராவணன், கோபங்கொண்டு வெப்பமான பெருமூச்செறிந்து கைகொட்டிக் கண்கள் தீப்பொறி சிதறப் பக்கத்திருந்தவர்களைப் பார்த்து, "குபேரன் சிவனையொத்தவனும்! சிவனுடைய தோழனும்!!" என்றுகூறி, இவைகளையெல்லாம் என்னிடம் துணிந்து கூறிய தூதா! "இதுதான் உனக்குச் சம்மானம்" என்று வாளைவீசி அவனை இருகூறாக்கினான்.

இராவணன் அளகாபுரியை முற்றுகையிடல்

பின்பு, இராவணன், "குபேரனை எதிர்த்துப் பொருது என் சினத்தைத் தீர்த்தபின்பே வேறுகருமம் செய்வேன். என்சேனை எழுக" என்று கூறக் கடல்கிளம்பியதுபோலப் படை எழும்பியது. சேனைபுறப்பட்டதனால் எழும்பிய தூள் மேலேழுலோகமுஞ்சென்று திரும்பிக் கீழேவிழுந்து கடல்களைச் சேறாக்கித் தூர்த்துத் திசையானைகளின் துதிக்கைத்துளைகளைச் செம்மி அடைத்தது. குபேரனுக்கு அபசகுனமாக இடப்புறம் துடிக்க, இராவணன் போர்க்கோலம்பூண்டு மகோதரன் பிரகத்தன் சுகசாரணர் தூமிராக்கன் முதலிய சேனாதிபதிகளும் சேனைகளும் சூழ்ந்துவர, அளகாபுரியைநோக்கிச் சென்று அந்த நகரை முற்றுகையிட்டான்.

குபேரன் போர்க்கேழுதல்

தன் நகரத்தை இராவணன் முற்றுகையிட்டதை நகர்க்காவலர்வந்து கூறக் கேட்ட குபேரன், பக்கத்திலிருந்தவர்களைப்பார்த்து, "அறிவில்லா

ருக்கு அறிவு புகட்டுவோர் அவரால் அழிவடைவரென்பதை இன்று, நாம் அனுபவத்தால் அறியலானோம்.* நாம் அரக்கனுக்கு நன்மதிகூறியனுப்பி னோம். அதன் பயனாக, அவன், நம்முடன் போர்புரிய வந்திருக்கிறான்?" என்று கோபங்கொண்டு, வண்டுறுக்கிந் தீயெழ விழித்து, "அரக்கராசன் வீரமும் வரங்களும் அழிவதை இன்று தேவர்கள் காண்பார்கள்" என்று கூறிப் போருக்கெழுந்து "சேனைகள் முன்செல்லட்டும்" என்று கட்டளை யிட்டான்.

போர்

இயக்கப்படையும் அரக்கப்படையும் எதிர்த்துப் போர்புரிந்தன. இரண்டுபக்கத்துப்படைத் தலைவர்களும் பொருதார்கள். போர்க்களம் அம்மி யாகத் தண்டாயுதம் குழவியாகக்கொண்டு இராவணன் இயக்கப்படையைக் குழம்பாக்கினான். பின்பு அவன், மகோதரன் முதலிய படைத்தலைவர்கள் அவரவர்களுடைய சேனைகளுடன் சூழச் சென்று அளகாபுரிக்கோபுரவாயிலை அடைந்தான். வாயில்காவலனான சூரியபானுவென்பவன் "ஏ பாதகா! நில்லு" என்று சொல்லிக் கோபுரவாயிலின் தோரணகம்பங்களிரண்டையும் பிடுங்கிக் கைக்கொரு கம்பமாகக்கொண்டு இராவணனைத் தாக்கினான், அவன் அத்தாக்குதலால் கலங்காதவனாய் அந்தக் கம்பங்களைப் பிடுங்கி அவை களைக்கொண்டு அந்த வாயில்காவலனை அறைந்து கொன்றான்.

சூரியபானு மடியக்கண்ட இயக்கப்படை ஓடலுற்றபோது, மாணி பத்திரனென்னும் இயக்கப்படைத்தலைவன் வந்து தடுத்து நிறுத்தினான். அந்தப் படையை மகோதரன் முதலிய அரக்கப்படைத்தலைவர் தாக்கிச் சரியச்செய்தனர். அப்போது மாணிபத்திரன் கோபமூண்டு அரக்கப்படைத் தலைவரில் தூமிராக்கனை யெதிர்த்துப் பொருதான். பின்னவன் முன்னவ னைத் தண்டாலடித்தான். அடித்தவனை அடிபட்டவன் திருப்பித் தண்டா லடித்துத் தரையில் விழச்செய்தான்.

தன் படைத்தலைவன் தூமிராக்கன் விழக்கண்ட இராவணன், அவனை வீழ்த்திய மாணிபத்திரனை யெதிர்ந்தான். அவன் இராவணன்மேல்

---

* அறிவிலாதவற் கறிவன சொல்லுவார் அவரால்
இறுதியெய்துவ ரென்னுமதின்றுகை கண்டோம்

இறுதி - முடிவு; அழிவு (தமிழகராதி).

அம்பெய்து தண்டினால் கிரீடங்கள் பிளக்கும்படி தாக்கினான். அதனால் இராவணன் அடங்காத கோபமடைந்து மேகம் இடித்தல்போல அதட்டிக்கொண்டு அவன்மேற் பாய, அவன் பயந்து புலிக்குப் புறகிட்டோடும் ஆடுபோல ஓடினான். உடனே இயக்கப்படைமுழுதும் முறிந்து முதுகிட்டோடியது.

குபேரன் இராவணனுக்கு அறிவுரை கழறுதல்

தன் படை முறிந்தோடியதை அறிந்த குபேரன், இராவணனெதிரே சென்று, "அம்மையை, அப்பனை, அண்ணனை, அந்தணரை நிந்தனைசெய்து சிறவோர் இம்மையிற் பழியையும் மறுமையில் நரகையும் அடைவார்கள்" என்று கூறிய நீதி, சுவர்மேலெறிந்த பந்துபோல உள்நுழையாதொழிந்தது.

இராவண குபேர யுத்தம்

இனிப் போர்பொருதலே பொருத்தமானதென்று குபேரன் தண்டாயுதத்தைக் கையிற்கொண்டு, இராவணனைத் தாக்கினான். தாக்குண்டவன் மேனி நடுக்கமுறக் கோபமூண்டு தாக்கியவன்மேல் மலைவிழுந்தாற்போல விழ, இருவருக்கும் போர்மூண்டது. வாலி சுக்கிரீவ சகோதரர்போலவும் சுந்தோபசுந்தர்களாகிய சோதரர்*போலவும் பாவதருமங்கள்போலவும் இருவரும் பொருதனர். குபேரன் இராவணன்மீது அக்கினியத்திரத்தை எய்தான். அதை இராவணன் யமன் அத்திரத்தால் விலக்கிவிட்டுத் தண்டாயுதத்தினால் தாக்கக் குபேரன் மூர்ச்சித்துவிழுந்தான்.

இராவணன் அளகையைக் கொள்ளையிட்டுப் புட்பகத்தைக் கைப்பற்றல்

உடனே இராவணன், அளகாபுரியுள்ளே புகுந்து, அங்குள்ள பொருள்களையெல்லாம் கொள்ளையிட்டுப் புட்பகவிமானத்தையும் கவர்ந்துகொண்டு போனான்.

புட்பகம் கயிலையை அணுகலும் அசைவற்றுநிற்றல்

புட்பகம், கயிலையை அணுகியவுடனே, அசைவற்று நின்றுவிட்டது. அதன் காரணம் யாதென இராவணன் மந்திரிமாரை வினவ; அவர்கள் அது குபேரனை நெடும்பொழுது பிரிந்த வருத்தத்தால் நின்றதோவென

* சோதரர் - சகோதரர்.

எண்ணிக்கொண்டிருக்கும்போது, நந்திவந்து, "இந்தக் கயிலைமலை, பார்வதியுடன் பரமசிவன் வாழுமிடமென்று புட்பகம் நிற்றலுற்றது. அதை இம்மலையைவிட்டு விலகச்செலுத்து" என்று இடித்துரைத்தான்.

இராவணன் நந்தியை இகழ, அவன் சபித்தல்

இராவணன், நந்தி வருந்தும்படி இகழ்ந்து குரங்குமுகனென்று கூறக் கோபமுற்று, "இலங்கையுள்ளே குரங்குகள் புகுந்து உன் குலத்தினரைத் தொலைத்திடுக" என்று நந்தி சாபமிட்டான்.

இராவணன் கயிலையையெடுத்தல்

இராவணன், இது (சபித்தல்) பயங்கொள்ளித்தவசிப்பகட்டென்று கருதிப் புட்பகத்தை நிறுத்திய மலையை முறிப்பேனென்று அதனை விரைந்தெடுக்கலுற்றான். அதனால் சந்த இருடிகளுள்பட்ட தவமுனிவரும் பிரமநிட்டரும் தேவரும் சிவபத்தரும் சிவகணமும் சித்தரும் இயக்கரும் நிலைகுலையலுற்றார்கள். பாடிக்கொண்டிருந்த தும்புருநாரதரும் ஆடிக்கொண்டிருந்த அரம்பைமாதரும் அஞ்சி நடுங்கி அலறினார்கள். ஊடிக்கொண்டிருந்த உமை சிவனைத் தழுவிக்கொண்டாள்.

சிவன் காற்பெருவிரலால் அழுத்த, இராவணன் கதறல்

சிவபெருமான் தேவியின் நடுக்கத்தையும் மற்றெல்லாருடைய கலக்கத்தையும் தீர்க்கக்கருதிக் காற்பெருவிரல்* முனையைச் சிறிதே ஊன்றினான். அதனால் அழுந்திய கயிலைமலையால் இராவணன் அழுத்தப்பட்டு அலறிக் கதறினான்.

இராவணன் சாமகானஞ்செய்தலும் சிவன் வரமருளலும்

அவன் ஆலையிலகப்பட்டகரும்புபோல நசுக்குண்டு பத்துவாய்களினின்றும் இரத்தம் கொப்புளிக்க ஆயிரம் ஆண்டு அலறிக் கதறி அழுதுகொண்டிருந்தான். அமைச்சர்கள் 'உன் வருத்தம் ஒழிதற்கு உன் உடலுறுப்புக்களைக் கொண்டு யாழுண்டாக்கிச் சிவபெருமான் திருச்செவி சேரும்படி சாமகானஞ்

---

* சாமானிய வெள்ளொளியை முப்பட்டக்கண்ணாடி (Prism) இனிய எழுநிறங்களாகக் காட்டுதல்போலச் சாதாரணமாகக் 'காற்பெருவிரல்' என்பதைக் கம்பர் 'சேவடிக்கொழுந்து' என இதன்முன் இனிமையாகக் கூறியிருப்பது, இங்கே ஞாபகத்திற்கு வருகின்றது. (கம்பராமாயணசாரம் சுந்தரகாண்டத்தில் 'குன்றம்நீ' என்ற 57-ம் பாட்டையும் அதன் உரையின் கடைசிப்பகுதியையும் காண்க.)

செய்வாயாக' என்று யோசனை கூறினார்கள். அவன் அவர்கள் சொல்லியபடி செய்தலே நல்லதென்று துணிந்து, ஒரு தலையையும் ஒரு கையையும் துண்டித்து (தலை சுரையாகக் கை தண்டாகக் கைநரம்பு யாழ்நரம்பாக) யாழ்* உண்டாக்கிச் சாமகானஞ்செய்தான். சிவன் மகிழ்ந்து (துண்டுபட்ட தலையையும் கையையும் பண்டுபோல உண்டுபண்ணி) அவனை அழைத்துத் திரிலோகாதிபத்தியமும் (மூன்றுலக ஆட்சியும்) மூன்றரைக்கோடி ஆண்டு வாழ்நாளும் எல்லா ஆயுதங்களையும் வெல்லும் சந்திரவாளும் கொடுத்து, "தசக்கிரீவன்" (- பத்துக்கழுத்தையுடையவன்) என்னும் பெயரையுடைய நீ கயிலைமலையடியிற் கிடந்து கதறியழுததுகாரணமாக இராவணன் (அழுபவன்) என்ற பெயர் பிரபலமாக வழங்கப்பெறுவாயாக" என்று கூறி விடைகொடுத்தனுப்பினான்.

திருமால் வஞ்சனையால் இராவணன் மூன்றரைக்கோடி ஆண்டுகளை அரைக்கோடி ஆண்டுகளாக்கிக்கொள்ளல்

இராவணன் வரங்கள்பெற்றதைத் திருமால் தெரிந்து அவைகளை நிலையாதனவாக்கக்கருதித் தண்டு கமண்டலதாரியாய்க் குடையேந்தி (முனிவேடந்தாங்கி) இராவணன் எதிரேசென்று "நீ வரம்பெற்ற விவரத்தைச் சொல்" என, அவன் சொல்லத் திருமால் "நீ முன்பெற்ற மூன்றரைக் கோடி ஆண்டுகளொழிய† ஓர் அரைக்கோடியாண்டு வேண்டிக்கொள்" என்றான். இராவணன், சிவனிடம் திரும்பிச்சென்று, திருமால் சொல்லிக் கொடுத்தபடியே "முன்கொடுத்த மூன்றரைக்கோடியாண்டுகளொழிய† ஓர் அரைக்கோடியாண்டு உதவியருள்க" என்று வேண்டிக்கொண்டான். சிவன், இது மாயவன் மாயமென்றுதெரிந்து சிரித்து "நீ வேண்டியதை ஈந்தனம்" என்று கூறி விடைகொடுத்தனுப்ப, இராவணன் திரும்பிப் போனான்.'

ஏழாவது வரையெடுத்தபடலம் முற்றிற்று

---

* 'சூழ்தரு நரம்பு தண்டம் சுரை மூன்றும் இசையில் யாழாம்' என்பது குற்றாலத்தலபுராணம் மந்தமாருதச் சருக்கம்—௪௬.

† ஒழிய - (1) தவிர - அல்லாமல்; (2) நீங்க.

கண்ணகிமணம் மறையோர்மன்றலா, காதற்கற்பா?

(திருவாளர். S. S. பாரதியாரவர்கள் M.A. B.L.)

சிலப்பதிகாரம் பழைய சங்ககாலச்செய்யுள் எனவும், தொல்காப்பியர் நூலின்முடிபே அதற்கு முடிபெனவும் பழைய உரையாளரும் புலவர் பலரும் கூறுவர். மணமுறைபற்றித் தொல்காப்பியர் பெரும்பழநூலும் இறையனாரகப்பொருளும் பண்டைச் சான்றோர்செய்யுளும் தரும் தமிழ்மரபு, காதல்மணமொன்றே.

"கற்பெனப்படுவது களவின்வழித்தே"

என்பது களவியல்நூற்பா (15). தொல்காப்பியர் கரணமொடு புணரும் கற்புத்திறம் விளக்குங்கால், அம் மணமக்களை "இருவரும் (தமியராய்) எதிர்ப்பட்டஞான்றுதொடங்கி உழுவலன்பால் உரிமை செய்தொழுகலிற் 'கிழவனும் கிழத்தியும்' என்றார்", எனக் கூறுவர் நச்சினார்க்கினியர். மணந்து மாண்புறும் கற்புறு காதற்சிறப்பனைத்தும் முன் நிகழ்ந்து கழிந்த களவின்பயனே எனக் கற்பியலிறுதியிலும் விளக்குவர் தொல்காப்பியர். களவிற் கிழவனும் கிழத்தியுமாய் ஒழுகிய காதலர் இருவரும் தம் காதல் வெளிப்பட மணப்பதே கற்பென்பது தமிழ்நூலோர் பழவழக்கு.

கூட்டக்கூடாத் தமியர் கண்டு அன்பொடுபுணர்ந்த காமக்கூட்டம் மனையறமாட்சிக்கு விதைமுதலாதல், உலகியலற்ற செய்யுள் வழக்கென்பர், தமிழ்வழக்கிழந்து ஆரியர்மதமேலோங்கிய பிற்காலப் புலவர்சிலர். எனினும், தொல்காப்பியர், தாம் விளக்கும் ஐந்திணைக் காதலறம் 'பாடல்சான்ற புலனெறிவழக்'கில்மட்டுமன்றித் தம் காலத் தமிழகத்தில் 'நாடகவழக்கினும் உலகியல்வழக்கினும்' நிகழ்ந்த நன்மரபெனத் தெளிவுரைப்பர்.

பிற மரபுடைய அயலவர்மணமும் தமிழிற் கூறில், காதன்மண மாய்க்கதைக்கும் புலனெறிக்கடனைக் கம்பர்கவியில் நாம் காணுதல் கூடும். பெற்றோர்தரவோ விற்றிறத்தாலோ உற்ற மகளிரை உரிமையாய்மணக்கும் ஆரியர்பெருமகன் இராமன் சீதையை முதலில் மணவறையதனிற்கண்டு மணந்துகொண்டு, பின் காதல் காட்டினன் என்று வான்மீகி கூறினர். மாடத்துச் சீதையும் வழிபடர் இராமனும் ஒருவரையொருவர் பிறர் அறியாமற் கண்டு காமுற்றுக் கரந்தகாதலாற் கலந்துளமணந்தனர் என்றும், பின் காதற்கிழத்தியைக் கொடைக்குரிமரபிற் சனகன் கொடுப்பக் கொளற்குரிமரபில் இராமன் கொண்டு, மாமுதுபார்ப்பார் மறைவழி காட்டத் தீவலஞ்செய்து கரணமொடு புணர்ந்தானென்றும், ஆரிய மன்றலைத் தமிழ்ப்பழவழக்கால் களவுக்காதல்கனிந்த கற்பறமண விழவாக்கித் தமிழகப் புலனெறிமரபைப் போற்றுவர் கம்பர்.

இம் மணமுறை மாற்றெனுத் தமிழ்நூன்மரபாகவும், கண்ணகி கோவலன் மங்கலமணவிழா உழுவலன்புடையார் காதற்கிழமையால் நிகழ்ந்ததென்னமல், அவரை "இருவர்குரவரும் ஒருபெரு நாளால் மணவணிகாண மகிழ்ந்துழி.......மாநகர்க்குத் தம்மக்கள் மணம் அறிவித்தார்". உடனே, "சாலியொருமீன்றகையாளைக் கோவலன் மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலஞ் செய்து" மணந்தான் என்னும், சிலப்பதிகார மங்கலவாழ்த்துப் பாடல். அது,

"நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்,
ஈகைவான் கொடியன்னாள், ஈராறாண் டகவையாள்!

அவளுந்தான்,

போதிலார் திருவினாள், புகழுடை வடிவென்றுந்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்று
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகியென்பாள் மன்னோ.

ஆங்கு,

பெருநில முழுதாளும் பெருமகன் றலைவைத்த
ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்தும் மாசாத்து வானென்பான்
இருநிதிக் கிழவன்மகன், ஈரெட்டாண் டகவையான்

அவனுந்தான்,

மண்டேய்த்த புகழினன், மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினு ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான், கோவலனென்பான் மன்னோ.

அவரை,

இருபெருங் குரவரும் ஒருபெரு நாளான்
மணவணி காண மகிழ்ந்தனர்; மகிழ்ந்துழி
யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்.

அவ்வழி,

நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்கள் நோன்பென்னை?
விரையினர் மலரினர் விளங்கும் மேனியர்
உரையினர் பாட்டினர் ஒசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
....
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
....
காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
அங்க ணுலகில் அருந்ததி யன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினர்."

என்பதாம்.

இதற்கு உரைவகுத்தோர் இருபழம்புலவர். ஆழ்மதிநுட்பத் தரும்பதவுரையினர், அளப்பரும்நூலறிந் தகன்றபுலமை அடியார்க்குநல்லார்—எனும் இருவருரையிலும், கண்ணகி கோவலன் வைதிகமணத்தின்முன் ஒருவர்பால் ஒருவரின் காதற்குறிப்புச் சிறிதுமில்லை.

பாட்டில், களவுநிகழ்ச்சி விரியாவிடினும்,முன் "தாமே அவளே தமியர்கண்டு" உள்ளங்கலந்து ஒத்தகாதலுழுவலுடையார் பின் மணவிழவயர்ந்தனரென்றும் குறியாராயின், இளங்கோவடிகள் தமிழ்மரபிறந்த தவறுடையராதலைத் தடுக்குமாறில்லை. ஆழ்ந்து துருவி அளந்தறியாமல், அத்தவறு அவர்மேற் சுமத்தலும் அறமன்று. அவருக்குப் பலநூற்றாண்டுகளுக்குப்பிறகு வடநூன் முடிபும் மரபும் வழக்கும் மலிந்துவழங்கிய பிற்காலத்தில், திருத்தகுதேவரும் கம்பரும் முறையே ஆரியர்பெருமக்களான சீவகன் இராமன் கதைகளைப் பாடுஞ்செய்யுளில் அன்னார்மணங்களைக் களவின் வழித்தாம் கற்புமணமாக்கித் தமிழ்மரபோம்பின செவ்வி நாமறிவோம்.

இவ்விருபுலவர்க்கும் ஏறக்குறைய அறுநூறாண்டுகளுக்கு முன்னே, தொல்காப்பியர்நூன்முடிபொன்றே பேணித் தமிழ்த் தலைமக்களிருவர்மணத்தை இளங்கோவடிகள், தமிழ்முறைமறந்து, பெற்றோர் பிணைக்க முற்றும் தாம் முன் அன்பறியாதார் வைதிக மன்றலாற் கூடினதாகப் பாடினரென்பது பாடாண்துறையா? பீடுதருமா? அன்றே! அதனால் அடிகளின் செப்பனிட்ட செந்துறைச்செய்யுளினடிகளை ஆழ்ந்தாராய்ந்து நூன்மரபிகழும்பழி அவர்மேற் சுமத்தாமற் பழந்தமிழ்வழக்கவர் பாட்டிற் காண முயல்வது கற்பவர்தமக்கு முதற்கடனாகும். அக்கடனாற்றும் அறமேற்கொண்டு, மங்கலவாழ்த்தடிச் சொற்றிறந்தேர்ந்து தெளிவு தேடுவோம்.

"இருபெருங்குரவரும் ஒருபெருநாளால் மணவணி" காணுமுன்னே, மணமக்கள்பெயர் முதலிற் சுட்டும்பொழுதே,

"காதலாள்பெயர் மன்னும் கண்ணகி"

என்றும்,

"காதலாற் கொண்டேத்துங் கிழமையான் கோவலன்"

என்றும் அடிகள்கூறும் குறிப்பினை ஆய்வோம்.

ஒருவரோடமையாமல் இளங்கோவடிகள் இருவருக்கும் காத லுடைமையைக் கருதுஞ்சிறப்பாய்ச் சுட்டுகின்றார். பட்டாங்கே இவ் அடையினை இயலடைவில் ஈரிடத்தும் காதல்மாட்சி ஓதுவதற் குப்போதியதாகும். இதனால் இருவருள்ளத்தும் காதலுண்மையை விளக்க அடிகள் விரும்புதல் வெளிப்படை. எனினும், பேருரை யாளரிருவரும் இதற்கு வேறுரைகூறலால் மயங்கநேர்ந்தது.

கண்ணகிகாதல் கோவலன்மாட்டன்றிப் பெருங்குணத்தின் மேலதென்றும், 'காதலாற் கொண்டேத்துங் கிழமையான்' என் புழிக் காதல் கோவலனதாகாமல் அவனையேத்தும் மடவார்பால தென்றும் கண்ணழித்துரைப்பர் பழையவுரைகாரர். இவருரை யின்றேல், கண்ணகி கோவலன்பாற் காதலாள் எனவும், கோவலன் கண்ணகிபாற் காதலாற் கிழமையான் எனவும் கொள்ளுவதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆதலினால், உரைப்பரிசை உற்றுநோக்கி நடுநிலையில் ஆராய்தல் அறிஞர்கடன்.

உரைக்குறிப்பே அடிகள்கருத்தென்றுகொண்டால், தமிழ் வழக்கும் நூன்மரபும் இகழ்ந்தபிழைக் கவராளாவர். அறமுறை யில் உரைசிறவாப்பரிசு காணில், அதனோடு அப்பிழையை நூற்புலவர்க்கு விலக்கி நல்லபொருளும்கண்டுவைப்பது இனிதா மன்றோ!

"பெருங்குணத்துக் காதலாள்" என்பதை உருபுமயங்கிய செயப்படுபொருட்டொடராக்கி, "பெருங்குணங்களைக் காதலிப் பாள்" என்பர் அடியார்க்குநல்லார். இதிற் பொருள்சிறவாமையோடு ஓரளவு குறையும் தோன்றுகிறது. பெருங்குணங்கள் நிறைந்தவ ளென்றல் சிறப்பு. பெருங்குணம் கண்ணகிக்கு உடைமை யாகாமல், காதற்பொருளளவில் நின்றதென்பது, சால்புக்குறை குறிக்குமன்றிச் சால்புநிறைவின் சான்றாகாது. இனிப் "பெருங் குணங்களொடு காதலும் நிறைந்தவள்" என்று செம்பொருள் கொண்டால், இத்தொடரின் சிறப்பும் செவ்வியும் நிரம்பக் காணு வம். அன்றியும், அடிகள் வாளா 'பெருங்குணத்துக் காதலாள்

கண்ணகி' என்று கூறியமையவில்லை; அத்தொடருக்குச்சிறப்படை யாய் அதற்குமுன்னே கூறப்படுஞ் சொற்களையும் சேர்த்துநோக்கி, இதன் கருத்தைத் தேர்தல்வேண்டும்.

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்,
தீதிலா வடமீனின் றிறமிவள் றிறமென்றும்,
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள், பெயர்மன்னும் கண்ணகியென்பாள்"

என்று தொடர் நின்றமுடியும். இதில், 'காதலாள்'—'கண்ணகி யென்பாள்' என்பன எழுவாய் பயனிலைகள். பிறவெல்லாம் 'காத லாள்' என்பதற்குச்சிறப்படை. "வடிவென்றும் திறமென்றும் மாத ரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்—அவ ளாவாள்-கண்ணகியென்பாள்" என்று, இங்கு இத்தொடர்முழுதும் பட்டாங்கே கண்ணழிக்க நின்று நிறையும். 'திருவினாள் (வடிவு இவள்) வடிவென்றும், வடமீனின் திறம் இவள் திறமென்றும், மாத ரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் கண்ணகி' என்றதனால், திருவினாள்வடிவும் அருந்ததிகற்பும் ஒருங்கமைந்தவள் இவள் என்ன மாதர்தொழ விளங்கிய காதலாள் என்று, கண்ணகியைப் பாராட்டுவதே அடிகள்கருத்தாதல் தேற் றம். எனவே, எழிலால்மட்டுமன்று, கற்புறுகாதலாலும் மாதரும் தொழச்சிறந்துவிளங்கிய பெரியாள் கண்ணகி என்றவாறாயிற்று. பின் கோவலனை 'மடவார் ஆயத்துக்கொண்டேத்துங் கிழமை யான்' என்னும் இளங்கோ, இங்கு ஆயஞ்சுட்டாது வாளா 'மாத ரார் தொழுதேத்த' எனக் கூறிய செவ்வி நினைந்து உவந்து சுவைத் தற்குரியது. பொதுவாகப் பெண்டிர்பெருமையைப் பெண்கள் புகழ்வது, புலவரைப் புலவர் புகழ்வதுபோல அருமையினருமை யாகும். கூட்டத்தில் ஒருவரைப் புகழ்பவர்பலரோடு கூடப்புகழ் வது அழுக்காறுடையார்க்கும் விலக்கமுடியாது; ஆயினும், தனிமை யில் ஒளவியம் தாண்டவமாடும். அதனால், புகழற்குரிய ஆயத் தன்றிப் பிறமாதர் கண்ணகிகற்புக்காதலை, "எத்தியேத்தித் தொழு தார்" என்று அவள் மாசறு காதல்மாண்பினை இளங்கோப் பேச லாயினர்.

இன்னும், மணத்தைக் குரவர்நினைப்பதன்முன்னே, கண்டு தன் கிழவனைக் காதலியாதாள் கண்ணகியாயின், 'தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்' என்று சுட்டுவதும்பொருந்தாது. மறைந்த காதலைக் களவென்பதுபோற் காதல்வெளிப்பாடே கற்பறமாகும். காதலில்லாக்கற்பு, வானத்தாமரைபோற் கருதற்கரியது. நீரினுயரும் தாமரைபோலக் காதலிலெழுவது கற்பின்பொற்பு. இங்கு, 'கற்புயர்காதலாள் கண்ணகி' எனலால், அவள் ஒருதலைமகன்பால் நிறைகாதலுடையவள், அவனுயர்காதற்குரியளுமாவள், என்பது தெளிக்கப்பட்டது.

இன்னும், "மாதரார் தொழுதேத்த வயங்கிய காதலாள்" எனின் அமையுமே! "பெருங்குணத்துக்காதலாள்" எனக் கூட்டிக் கூறுவதேன்? என்பதும் ஆராயத்தக்கது. கண்ணகிகாதல், ஒருவனை எழிலால் மதிமயங்கிக் காமுற்றுப் பிறகு அவன்குறையுணர்ந்து தணியும் வேட்கையன்று; தமிபராய் எதிர்ப்பட்டஞான்றுமுதலே என்றும் ஒன்றுபோல் இருவயிரொத்து நின்றுவளரும் பெருநீர்மைத்து என்பது விளங்கக் காதலுக்குமுன் பெருங்குணத்தடை பெய்யப்பட்டது.

இனிக் கோவலன்மணத்தைக் குரவர் கருதுமுன் அவனியல் கூறும் அடிகள், அவன் அழகும் நிறையும் அமைய விளக்கும் சொற்றிறம் ஆய்ந்து சுவைத்தற்குரியது. கண்ணகிக்கொத்த செல்வமும் பெருங்குடிப்பிறப்பும் உடைமையோடு, பெருமையும் உரனும் பிறங்குந்தலைமகன் கோவலன் என்பதை அடிகள் தெளிந்த சொல்லால் அளந்துகூறுவர். 'மண்தேய்த்த புகழினான்' என்று அவன் பெருமையும், 'செவ்வேளென் றிசைபோக்கி' என்று அவன் உரனும் விளக்குவர். 'முருகொத்தியே முன்னியது முடித்தலின்' என்னும் நக்கீரர் புறப்பாட்டடியால் (56) இங்குச் செவ்வேள் ஒப்புமை உரனைக்குறிப்பது தேற்றம். இதன்மேலும்,

> "......................................மடவார்தம்
> பண்டேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
> கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
> கொண்டேத்துங் கிழமையான் கோவலனென்பான்"

என்று இங்கு அடிகள் விளக்கி முடிக்கின்றார். பெண்டிரைப் பேதுறுக்கும் காமச்செவ்வியும் கட்டழகும் சுட்டுவது அவர்

கருத்தாயின், அவற்றிற்குரிய காமனைவிட்டு முருகனை ஒப்பிட முனையவேண்டா. அக்கருத்தை விலக்குவதே, கருவேளை விலக்கிச் செவ்வேளை ஒப்புக்கூறிய தன்குறிப்பாகும். 'முருகவேள்' என்னாது 'செவ்வேள்' என்றார், அவன் செந்திறக் காதற்சிறப்பினைநோக்கி. எல்லாரிடத்தும் பொல்லாக்காமம் புகட்டும் காமனைச் சான்றோர் வெறுப்பர். அறம் நிறைந்து ஆன்ற அன்பிற்கனிந்த காதற்கடவுள் வள்ளிமணாளன் என்று பண்டைச்சான்றோர் கொண்டனராதலின், கோவலன்காதல், நோந்திறக்காமமன்றெனக்கடிந்து, செந்திற அன்பறமென்று வரையறுத்து வற்புறுத்தும் தம் கருத்தை அடிகள் இங்குச் 'செவ்வேளென்றிசைபோக்கி' என நிறுத்தசொல்லாற் குறித்து விளக்கினர்.

தனிமுதற்கடவுளான தமிழ்முருகனை ஆரியதேவகுமாரனுக்கிச் சுப்பிரமணியம் என்று தீர்த்தநாமகரணச்சடங்குஞ் செய்து, தேவசேனாபதிப்பதவியும் தெய்வயானை திருமணமும் தந்தபின், குறவள்ளிபால் அறம் திறம்பாக் கடவுட்காதலுடையானைக் கழிகாமலோலனாகப் புதிய பெருந்திணைக்கோவைகளும், பெண்பாற்கைக்கிளை, தேறுதலொழிந்த காமத்து மிகுதிற உலாக்கள், சிந்து, கீர்த்தனைகளும் திருப்புகழ் பெருக்கின. பழந்தமிழர் தொழும் முருகன், குறவள்ளி அறக்கொழுநன். அதனால், அடிகள் வள்ளிபால் என்றும் வளரும் அன்புடைய செவ்வேள்போலக் கண்ணகியிடத்து மாறாக் காதலன் இவனென்று, "மடவார் ஆயத்துக்கொண்டேத்துங் கிழமையான்—கோவலன்" என்று கூறி, அவன் நீதறுகாதற்செவ்வி பாராட்டுவர்.

களவிற்கிழவி காதற்கிழவன்மணம்தர முருகனை வாழ்த்தும் மரபு தொகைநூற்பாக்களிற் பயிலக்காணலாம். கற்புடைமகளிர் காமனை வழிபடமறுப்பது பழைய செய்யுள்வழக்கு. அதனால், அடிகள் செவ்வேளென் றிசைபோக்கி மடவார்கொண்டேத்தின, வள்ளித்துறைவாழ்த்தினைச் சுட்டினர்.

இனி, 'காதலாற் கொண்டேத்துங் கிழமையான்' என்றார், பிறபல சால்பு அவன் பொதுப்புகழாக, சிறப்பாய் மடவார் பாராட்டெடுத்து அவன் வீயாக்காதற் றாய பெற்றியால் தம் ஆயத்து ஏத்தற்குரிய பெரியவன் என்பதை விளக்க. இங்கு, 'மடவார் பாராட்டிக் காதலாற் கொண்டேத்துங் கிழமையான்' என்னமல்,

‘ஆயத்துக் கொண்டேத்துங் கிழமையான்’ என்றதன் சிறப்பும் குறிப்பால் உணர்வைத்தார். மடவார் அவனைப் பாராட்டுதற்குத் தாமுறு காமம் காரணமன்று; பெண்டிர் பிறனைக் காமம்பற்றி ஏத்துவராயின், தனிமையில், அன்றேல் காதற்றோழிபால் குறிப்பாலன்றி ஆயத்துப்பேசுதல் அறக்கழிவுடையதாம். அற்றேல் அதனை அடிகள் கூறார். “அறக்கழிவுடையன பொருட்பயம் படவரின், வழக்கென வழங்கலும் பழித்தா”மாதலின், ‘மடவார் ஆயத்துப் பாராட்டிக்........காதலால் கொண்டேத்துங் கிழமையான்’ என்றது, அவன் தூயகாதற்பெற்றிமையாலே மடவார்தம் ஆயத் தேத்தற்குரியவன் கோவலன் என்று அவன்பெருமை சிறக்கப் பேசியதாகும்.

இவ் அறக்காதற்றிறம் மதியாமல், “மடவார் தம் காமக்குறிப்பினால் உட்கொண்டு ஏத்துதற்குரியான்..........கோவலன்” என்று உரைகூறுவர் அடியார்க்குநல்லார். பண்டைத்தமிழ்நூன்மரபால் நோக்கின், குடிமடவார்க்குப் பிறர்நெஞ்சுபுகுதலே குற்றம். அதற்குமேல் தம் காதற்கிழவரையன்றிப் பிறர்பாற் காமுறுதலிற் பழி பிறிதில்லை. பாட்டுடைத்தலைவன் யாவனாயினும் தெருவிற்சென்றால், மனைதொறும் மகளிரனைவரும் குழுமி, மனைவிமார் கற்பும் கன்னியர் பெண்மையும் மறந்து காமுற்று மறுகுவதாகக் கவிக்கும் அறிவறம் மறந்த இழிதகவுணர்வு பண்டைச் சான்றோர்பாக்கள் அறியா. தொல்காப்பியர்முதனூல்வழக்கினை மறந்த பிற்காலத்தில் தமிழ்ப்பழமரபுகள் துறக்கப்பெற்றன. அதனாற் பிறந்தவை புரையுடை உலாக்கள். அடியார்க்குநல்லார்போல்வார் கருத்தின் பழி விலக்கநினைந்தே, அரும்பதவுரைகாரர் காதலாற்கொண்டேத்துதலை மடவார்க்காக்காமல் விலக்குவது கருதற்பாற்று. “மடவாராயத்துக்கொண்டேத்துஞ் செவ்வேளென்று கண்டார் கொண்டேத்துங்கிழமையான்” என்று இதற்கு அவர் பொருள்கூறிப் பெண்பழிபகற்றிப் புலனெறிபேணுவர். எனினும், அரும்பதவுரைகாரரும் அடியார்க்குநல்லார்போலவே காதலைக்கொண்டேத்துவார்க்கு ஆக்கினதால், கொண்டேத்தும் வினைக்குக் ‘கண்டார்’ என்று ஓர் எழுவாய் பெய்துகூட்டித் தாம் கருதிய குறையை

நிறைக்கநேர்ந்தது. காதலைக் கோவலன்பாலதாகக்கொண்டு, மடவார் அவனைத் தம் ஆயத்துப் பாராட்டிக் கண்டேத்துஞ்செவ்வேள் என்று இசைபோக்கி, அவன் அறக்காதற்பெருமையாற் 'கொண்டேத்துங்கிழமையான் கோவலன்' என்று பட்டாங்கே கேரொழுக்கிற் கண்ணழித்துச் செம்பொருள்கொள்ளின், பழியும் பிழையும் நுழையாதொழிய, விழுமியபொருளும் எழிலும் பெறலாம்.

சிலப்பதிகாரம் அகத்துறைச்செய்யுளன்மையானும், கண்ணகி கோவலன் புறவொழுக்கின்வரலாறே கூறுவதானும், அதில் அவர்கள் களவுநிகழ்ச்சிவிரியாமல், குறிப்பால் அடிகள் சுட்டிவிடுகின்றார். அவர்கள் முன் ஒருவரையொருவர் கண்டுளங் கலந்து காதலிற்கனிந்த பண்டைப்பரிசை அறிந்து அவர்குரவர், அப்பொருவரும் இருவரை அலர்வெளிப்படுமுன் மணம்புணர்வித்து மகிழத்துணிந்தார். அக் காதலர் மணமலிவை மடவார் ஆயத்துப்பாராட்டிக்கொண்டேத்திப் புகழ்ந்தார். அவ்வழி, முரசு முழங்க நீலவிதானத்து நித்திலப்பந்தரின்கீழ்க் கரணமொடு புணர்ந்த கற்புமணவிழவயர்ந்து, கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்ற மனையறம்புகுந்து மகிழ்கின்றார். இப்பெற்றியைப் புரைதீர் காமம் புல்லிய பாடாண்பரிசாக்கி, கடவுட்பத்தினி கண்ணகியோடு அவள் காதற்கிழவன் கோவலன் ஆகிய இருவரின் வாழ்க்கைவரலாற்றில் அவர் கற்புக்காதலை முற்படக்குறித்து மங்கலவாழ்த்தொடு அடிகள் தொடங்குவர். கரணவகை இதுவெனத் தமிழ்நூல் எதுவும் வரையறுத்திலது. காலந்தோறும் கொள்கைகள் மாறும். அவ்வழிக் கரணமும் பலதிறப்படலாம். எனினும், தொன்றுமுதற் சான்றோர் நன்றெனக்கொண்ட முளைப்பாலிகையும், மங்கலமடவார் மலரொடுவாழ்த்தும் மாலைமாற்றும், என்றும் எங்கும் தமிழர்மணங்களில் நின்று பயிலும். அம்மிமிதித்தலும் எழுநடத்தலும் மறையோர்மன்றலில் இன்றியமையாதன. கண்ணகிமணத்து அவை சுட்டப்பெறாமை, அவர் ஆரியவைசியராகாப்பெற்றியும், அவர்மணம் தமிழர் பழமரபாகிய களவின் வழித்தாம் கற்பறம் என்னும் காதல்மணமே என்ற பரிசும், தெளிய விளக்கும்.

ஒரு தனிப்பா

பிறந்தசங்கத்தையெடுத்துயிர்கெடுந்துப்
பின்னரோர்சிறுதோனிகேட்பார்

இறந்தசங்கத்தையெடுத்துயிர்கொடுத்தஃ
தெங்கணும்முழங்கிடக்குறித்தான்

சிறந்தசங்கத்தைமேற்படுந்தோரையிற்
செறிந்தசெந்நாப்புலவீர்காள்

நிறந்தசங்கத்தையேந்தினேனனைய
நெடுந்தகைப்பாண்டிமன்மன்னே

இது, ஸ்ரீமான். பாண்டித்துரைத்தேவரவர்கள் இம்மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவியதுபற்றிப் பாராட்டி, இச்சங்கத்தின் முதலாண்டுவிழாவில் திருவாளர் வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியாரவர்களால் இயற்றிப் படிக்கப்பட்டது.

இதனுள் பயின்ற சங்கம் என்பது பலபொருளொருசொல். அது, முறையே [1] சங்கு. [2] புலவர்சபை. [3] ஓர் பேரெண். [4] திருமாலின் ஐம்படையுள் ஒன்றான பாஞ்சசன்னியம் என்று பொருள் தரும். குறித்தல் - கருதுதல்; சங்குக்கினையை ஊதுதல் என்றும் பொருள்படும். நிறந்த-நிறமுடைய. பாண்டிமன்-பாண்டித்துரை.

மதிப்புரை

புதுக்கோட்டையரசினர் ஆட்சியுள் அடங்கிய இராமச்சந்திரபுரம் அன்புநிலைய வெளியீடுகளான (1) குண்டலகேசி அகவல், (2) எனதுபாட்டு, (3) சதாசிவப்ரம்மம் என்பவற்றின் ஆசிரியர் ஸ்ரீ சுத்தாநந்தபாரதியாரவர்களாவர். இவற்றுள், குண்டலகேசி அகவல் என்பது இறந்துபட்ட பழைய காவியங்களில் ஒன்றான குண்டலகேசியின் கதையுள் ஒருபகுதியைச் சுருக்கி அகவலடிகளாற் கூறுவது. எனதுபாடல் என்பது விட்மன் என்ற அமெரிக்கக்கவியின் எனதுபாடல் என்பதன் கருத்தை விளக்குவது. ஏனையது முனிபுங்கவராகிய

சதாசிவப்பிரம்மேந்திரர் சரித்திரச்சுருக்கமாய் அமைந்தது. இவற்றால், பொதுவாக ஆசிரியருடைய செய்யுளியற்றுந்திறமும் மொழிபெயர்க்குமுறையும் கருத்தமைதியும் கற்பனையும், சிறப்பாக அவருடைய உரைநடையழகும் நன்குவிளங்கும். அன்புநிலையத்தார் இத்தகைய புத்தகவெளியீடுகளால் தமிழ்த்தொண்டு புரிந்துவருவது பாராட்டத்தக்கது. இவற்றின்விலை:—குண்டலகேசி அகவல் அணா ௪. எனதுபாடல் தனிப்பிரதி அணா ௧௨; பன்னிரண்டு பிரதி ரூ ௧. சதாசிவப்பிரம்மம் தனிப்பிரதி அணா ௨; பத்துப்பிரதி ரூ ௧.

கிடைக்குமிடம்:—அன்புநிலையம், இராமச்சந்திரபுரம் P. O. திருச்சி ஜில்லா.

ஸ்ரீ. சாயிபாபாவும் உபாசனிபாபாவும்:—சாயிபாபா என்பவர் சித்திகள் கைவரப்பெற்ற ஒருத்தமர்; நம் இந்தியாதேயத்துள் வடநாட்டிலும் தென்னாட்டிலும் பிரசித்திபெற்றுப் பற்பலமதத்தினரான பல்லாயிரமக்களாற்போற்றிப் புகழப்பெற்றவர். உபாசனிபாபா, சாயிபாபாவின் அருள்பெற்றுயர்ந்த பெரியார்.

இவ்விருவர் வரலாற்றையும் யாவரும் படித்துப் பயன்கொள்ளும்படி, மதுரமித்திரன் ஆசிரியர் திரு. N. சுப்பிரமணியம் அவர்கள், சாயிபாபாவும் உபாசனிபாபாவும் என்ற பெயரிட்டுத் தமிழ்வசனமாக ஒரு புத்தகத்தையெழுதி அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். அதன் வசனநடை படிப்பார்க்கு இன்பம் பயப்பது.

நல்லார் குணங்களுரைக்கும் இப்புத்தகத்தின் முகப்பில் அன்பர்கள் சாயிபாபாவினுடைய குணவிசேடங்களை நினைவுகூர்தற்கும் துதித்தற்கும் உபயோகமாகும்படி தோத்திரப்பாமாலை ஒன்று சேர்க்கப்பட்டுளது. இப்பாமாலை, இம்மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலைபாசிரியர் திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. பிள்ளையவர்களுடைய கவிச்சுவை தமிழறிஞர் நன்கறிந்தது. இதன்விலை அணா—௪. வேண்டுவோர், மதுரமித்திரன் காரியாலயம், 235. நாயக்கர்புதுத்தெரு, மதுரை என்ற விலாசத்திற் பெறலாம்.

1943௵ எப்ரல்௴ 18௳ (சுபாநு௵ சித்திரை௴ 5௳) பகல் 12 மணிக்கு
இராமநாதபுரத்தில் மஹாராஜா அவர்களரண்மனையிற் கூடிய
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற

தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாதசேதுபதி மஹாராஜா அவர்கள்
—அக்கிராசனுதிபதி.

2. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C.
—உப-அக்கிராசனுதிபதி.

3. ,, மஹாவித்துவான் R. இராகவையங்காரவர்கள்.

4. ,, செ. மு. செய்யிதுமுகம்மது ஆலிம் புலவரவர்கள்.

5. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

ஸ்ரீமான் P. ராமஸ்வாமி ராஜு அவர்கள் B.A., B.L., ஸ்ரீமான் ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் B. A. இவர்களும் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1 சங்கமாபீசு வரவுசெலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2 மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய (1) மதுரை வக்கீல், மகா-ள-ள-ஸ்ரீ T. நாராயணபிள்ளை B.A. B.L., அவர்களையும், (2) இராமநாதபுரம் வக்கீல்களான மகா-ள-ள-ஸ்ரீ P. ராமஸ்வாமி ராஜு B.A. B.L., அவர்களையும், (3) மகா-ள-ள-ஸ்ரீ A. ரங்கஸ்வாமி ஐயங்கார் B. A. அவர்களையும் அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

3 மதுரை M. R. C. C. Bank-ல் வட்டிக்குக் கொடுத்துள்ள Fixed deposit தொகை ரூ. 25011-5-0-யும், ஷை பாங்கிலேயே, மறுபடியும் ஒருவருஷத்துக்கு, வருஷம் ஒன்றுக்கு ரூ 100-க்கு 2 வட்டிக்குப் புதுப்பித்திருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

4 மதுரை இந்தியன்பாங்கில் வட்டிக்குக் கொடுத்துள்ள மூன்று Fixed deposit தொகைகளாகிய ரூ 10000, மற்றொரு ரூ 10000, ரூ 5000-இவற்றை ஷை பாங்கிலேயே, ஒவ்வொன்றையும் மறுபடியும் இரண்டுவருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 100-க்கு 2¾ வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்று தீ. னிக்கலாயிற்று.

5 1943-1944-ஆம் வருஷத்துக்குத் தயாரிக்கப்பெற்ற சங்க வரவுசெலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

6 1943-ஆம் ஹூ நடத்தப்பெற்ற சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தம எழுதிய அறிக்கை பதிவுசெய்யலாயிற்று.

7 ஸ்ரீமது ராஜா M. தினகரபகதூர் அவர்களும், V. சுந்தரமையரவ ளும், V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்களும் காலஞ்சென்றமைய சங்கத்துக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் அநுதாபத்தையும் சங்கத்தார் ரிக் டில் பதிவுசெய்தார்கள்.

8 சங்கத்தின் வருஷோத்ஸவத்தை இராமநாதபுரத்தில் 1943-ம் ஜூன்மீ நடத்துவதற்குத் தேதி குறிப்பிடவேண்டுமென்று மாட் தங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

9 ஸ்ரீமான் P. ராமஸ்வாமி ராஜு B.A. B.L., அவர்களையும் ஸ்ரீ A. ரங்கஸ்வாமி ஐயங்கார் B. A. அவர்களையும் சங்கத்தின் காரியநிர் ஸபையங்கத்தினர்களாகத் தற்காலத்துக்கு நியமிக்கலாயிற்று.

10 சங்கத்தின் மாதாந்திரக்கணக்குகளைப் பரிசோதனைசெய்து துடன், சங்கத்தின் 1942-1943-ஆம் வருஷ வருஷாந்தக்கணக்கு பரிசோதனைசெய்துதரவேண்டுமென்றும் மதுரை, ஸ்ரீமான் R. சேஷை, கார் B. A. B L., அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், R. Shanmuga Rajeswaran

18—4—'43. அக்கிராசனாதி